# சட்டமன்ற தேர்தல் 2026 –
# களம் காணும் கழக வெற்றி வேட்பாளர்கள் !


அ.செ. வில்வநாதன்
(ஆம்பூர்)


டாக்டர் ராஜேஸ்வரி மோகன் காந்தி
கீழ்வைத்தினாங்குப்பம் (தனி)


ஏ.பி. நந்தகுமார்
(அணைக்கட்டு)


ப.கார்த்திகேயன்
(வேலூர்)


ஜெ.எல்.ஈஸ்வரப்பன்
(ஆற்காடு)


வினோத் காந்தி
(இராணிப்பேட்டை)


நித்யா சுகுமார்
(காஞ்சிபுரம்)


க.சுந்தர்
(உத்திரமேரூர்)


எஸ்.அமலு பொன்மலர்
மதுராந்தகம் (தனி)


எம்.கே.டி. கார்த்திக் தண்டபாணி
(செங்கல்பட்டு)


டாக்டர் ஆர்.எஸ்.கிருத்திகா தேவி
(தாம்பரம்)


தா.மோ. அன்பரசன்
(ஆலந்தூர்)


ச.அரவிந்த்ரமேஷ்
(சோழிங்கநல்லூர்)


தா.வேலு
(மயிலாப்பூர்)


ராஜா அன்பழகன்
(தியாகராயர் நகர்)


மா.சுப்பிரமணியன்
(சைதாப்பேட்டை)


ஏ.எம்.வி. பிரபாகர ராஜா
(விருகம்பாக்கம்)


நே.சிற்றரசு
(அண்ணா நகர்)


டாக்டர் எழிலன் நாகநாதன்
(ஆயிரம் விளக்கு)


பி.கே. சேகர்பாபு
(துறைமுகம்)


டாக்டர் சுபேர்கான்
(இராயபுரம்)


தமிழன் பிரசன்னா
எழும்பூர் (தனி)


கே.எஸ்.ரவிச்சந்திரன்
திரு.வி.க. நகர் (தனி)


கார்த்திக் மோகன்
(வில்லிவாக்கம்)


ஆர்.டி. சேகர்
(பெரம்பூர்)


ஜே.ஜே.எபினேசர்
(டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர்)


எஸ்.சுதர்சனம்
(மாதவரம்)


டாக்டர்.அ.பு.பூர்ணிமா
(அம்பத்தூர்)


காரம்பாக்கம் க.கணபதி
(மதுரவாயல்)


ஆவடி சா.மு.நாசர்
(ஆவடி)


ஆ.கிருஷ்ணசாமி
(பூந்தமல்லி)


வி.ஜி.ராஜேந்திரன்
(திருவள்ளூர்)


டி.ஜெ.கோவிந்தராஜன்
(கும்மிடிப்பூண்டி)

## வெல்வோம் இருநூறு! படைப்போம் வரலாறு!
## ஸ்டாலின் தொடரட்டும்! தமிழ்நாடு வெல்லட்டும்!

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆ.த. சதாசிவம்
### மார்ச் 29 (2017)



ஒன்றுபட்ட சென்னை மாவட்டத்தில் டாக்டர் அண்ணா மன்றத்தை துவக்கி, கழகப் பணியாற்ற தொடங்கிய இவர், நெருக்கடிகாலத்தில் 76வது வட்டப் பொறுப்பாளராகவும், பின்னர் ஆயிரம் விளக்கு பகுதி பிரதிநிதி, பகுதி பொருளாளர், மாவட்ட பிரதிநிதி என கழக அமைப்புகளில் பல்வேறு பொறுப்புகளை வகித்து, தலைமை நிலைய அலுவலகச் செயலாளராக நியமிக்கப்பட்டு பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

'இந்து' நாளிதழில் பணியாற்றியதோடு, இந்து தொழிற் சங்கத்தில் பொறுப்பு வகித்து திறம்பட பணியாற்றியவர்.

சென்னை துறைமுக பொறுப்புக் கழக உறுப்பினராகவும், தமிழ்நாடு மின்சார வாரிய ஆலோசனை குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

"இவரையும் அண்ணா அறிவாலயத்தையும் பிரித்துப் பார்க்க முடியாத அளவிற்கு – இணை பிரியாத அளவுக்கு தலைமைக் கழகப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்" என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### தலைமைத் தேர்தல் ஆணையர் பதவி நீக்க நோட்டீஸ்!
## ஜனநாயகத்தை பா.ஜ.க. கேலிக்கூத்தாக்கி வருகிறது!
### திரிணாமுல் காங்கிரஸ் கட்சி புகார்!

கொல்கத்தா, மார்ச் 29-

தலைமை தேர்தல் ஆணையர் பதவி நீக்க நோட்டீஸ் விவகாரத்தில் நாடாளுமன்ற ஜன நாயகத்தை பாஜக கேலிக்கூத்தாக்கி வருவதாக திரிணாமுல் காங்கிரஸ் கட்சி புகார் தெரிவித்துள்ளது.

தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று 193 எம்.பி.க்கள் கையெழுத்திட்ட இம்பீச்மெண்ட் நோட்டீஸ், கடந்த 12ம் தேதி விதி முறைகளின்படி மக்களவை, மாநிலங்களவை செயல கங்களில் வழங்கப் பட்டது. இரண்டு வாரங்கள் கடந்தும் அந்த நோட்டீஸ் மீது இது வரை எந்த நடவடிக்கையும் இல்லை. இதற்கு திரிணாமுல் காங்கிரஸ் கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஏப்ரல் 2ம் தேதி நாடாளுமன்றம் ஒத்தி வைக்கப்பட உள்ள நிலையில், அதற்குள் பதவி நீக்க நோட்டீஸ் குறித்து விவாதிக்கப்படுமா என்பது சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளதாக திரிணாமுல் காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது. தலைமைத் தேர்தல் ஆணையர் பதவி நீக்க தீர்மான நோட்டீசை, ஏற்பதாக அறிவிக்க வேண்டும், இல்லாவிட்டால் நிராகரிப்பதாக அறிவிக்க வேண்டும் என்றும், ஆனால், எதுவும் கூறாமல் சபாநாயகர் மௌனமாக இருப்பது ஏன்? என்று திரிணாமுல் காங்கிரஸ் கட்சி கேள்வி எழுப்பி உள்ளது.

அரசுக்கும் தேர்தல் ஆணையத்துக்கும் இடையே ரகசிய உடன்பாடு உள்ளதா? இல்லை வெளிப்படையான உடன்பாடு உள்ளதா? என்று மாநிலங்களவை திரிணாமுல் காங்கிரஸ் குழுத் தலைவர் டெரிக் ஓ பிரையன் கேள்வி எழுப்பி உள்ளார். நாடாளுமன்ற இரு அவைகளின் செயலங்களும் இதுவரை நோட்டீஸ் குறித்து எதுவும் தெரிவிக்காதால், சட்டபூர்வமான நாடாளு மன்ற நடவடிக்கையை கூட அனுமதிக்காமல் ஒன்றிய பாஜக அரசு நாடாளுமன்றத்தை கேலிக் கூத்தாக்கி வருவதாக டெரிக் ஓ பிரையன் குற்றம் சாட்டி யுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### து. ராமதாஸ்
### மார்ச் 29 (2021)



தனது இளமை பருவத்திலேயே கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

சென்னை மேற்கு மாவட்டம், மயிலாப்பூர் பகுதியில் வட்டச் செயலாளராகவும் – மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்..

தலைமைக் கழகம்
தி.மு.க.